E - ISSN: 3139 – 1893 www.boomiirjt.com Volume 2, Issue 1 Jan – Mar 2026

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# சங்க இலக்கியத்தில் மருதநில மக்களின் தொழிலும் பொருளாதாரமும்
# The Occupation and Economy of the People of Maruthanila Sangam Literature

**ந. ஜெயந்தி**

முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (த), திருச்சிராப்பள்ளி – 620 017

**N. Jayanthi**

Ph.D Scholar (Full Time), P.G. & Research Department of Tamil, Bishop Heber College (Autonomous), Tiruchirappalli – 620 017, Email: jayanthiravichandran14@gmail.com , Cell No: 9942035652

**Abstract**

In Sangam Literature, the Economic of Maruthanila Agriculture was considered to be more important than other lands. Economics was a key factor in the proper functioning of a government that governed the people. This economy was considered a priority not only for the government but also for the individual. This article establishes that the people were also involved in economic development and that their technologies resulted in a thriving economy through trade, weaving, blacksmithing, thatch and leather working.

**Keywords:** Agriculture, Economy, Trade, Wealth, Barter, Land, Self-Sufficiency

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் மருதநில வேளாண்மையின் பொருளாதாரம் மற்ற நிலங்களை விட முதன்மையானதாகக் கருதப்பட்டன. மக்களை ஆளும் அரசு முறையாக நடக்க பொருளாதாரம் முக்கியக் காரணியாகத் தேவைப்படுகிறது. இப்பொருளாதாரம் அரசுக்கு மட்டுமல்ல தனிமனிதனுக்கும் முதன்மையாகக் கருதப்பட்டன. இவ்வகையில் மக்களும் பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில்களில் ஈடுபட்டதையும், அவர்களின் தொழில்நுட்பங்களின் விளைவாக வணிகம், நெசவுத்தொழில், கரும்பாலைகள், ஓலைத்தொழில், கொல்லர்தொழில், தொடுதோல் தொழில் ஆகியவற்றின் மூலம் பெரிதும் பொருளாதாரம் மேன்மையடைந்துள்ளது என்பதை நிறுவுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறிச்சொற்கள்**

வேளாண்மை, பொருளாதாரம், வணிகம், செல்வ வளம், பண்டமாற்று, நிலவருவாய், ஆலைகள், தன்னிறைவு.

## முன்னுரை

மருதநில மக்கள் வேளாண், சமூக மரபைப் பின்பற்றி உழவுத்தொழிலின் சிறப்புகளையும், நுட்பங்களையும் அறிந்து அதற்கேற்றவாறு தம் அகப்புற, வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டனர். மருதநிலத் தன்மைக்கேற்ப அந்நில மக்களின் வாழ்வு செல்வவளம் மிகுந்ததாகக் காணப்படுகின்றது. மற்ற நிலங்களைவிட இங்கு வாழும் மக்கள் தங்களின் தொழில்கள் மூலம் ஈட்டிய பொருளாதாரம் மிக அதிகமாகக் காணப்படுவதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உழவுத்தொழில்

நம் நாட்டின் தொழில்களுள் முதன்மையானதும் அடிப்படையானதும் உழவுத்தொழிலே ஆகும். இதனை,

*“உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”*

*(புறம் - 18 (19-20)*

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளாலும்,

*“உழுவார் உலகத்திற் காணியஃதாற்றா*
*தொழுவாரை யெல்லாம் பொறுத்து”*

*(குறள் 1032)*

என்னும் குறளாலும்

*“இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்*
*உழவிடை விளைப்போர்”*

*(சிலம்பு.10: 151-152)*

என்னும் சிலப்பதிகாரப் பாடலடிகளாலும் அறியமுடிகின்றது.

இரப்போர்க்கும் புரப்போர்க்கும் உணவை விளைவித்துத் தரும் உழவரே உலகின் முதன்மையர், ஆதலால் ஒரு நாட்டின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை உழவுத் தொழிலே என்பதைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் அறிந்திருந்தனர். இத்தொழிலுக்கு இன்றியமையாதவையாக நிலம், நீர், விதை, எருது ஆகிய நான்கும் அமைகின்றன. நன்செய்களுள் பழமையானது ‘பழனம்’ என்றும், போரடிக்கும் களமுள்ளது ‘கழனி’ என்றும் சொல்லப்பெறும். இதனை,

*“பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்*
*கழனி ஊரன் மார்பு*
*பழனம் ஆகற்க என வேட்டேமே” (ஐங். 4 : 4-6)*

என்னும் ஐங்குறு நூற்றின் மருதத்திணைப் பாடலடிகளால் அறியமுடிகின்றது.

**நடவுத்தொழில்**

*“மலை கண்டன்ன நிலைபுணர் நிவப்பின்*
*பெருநெற் பல்கூட்டு எருமை உழவ!*
*நீர் உறுசெறுவின் நாறுமுடி அழுத்த, நின்*
*நடுநரோடு சேறி ஆயின்” (நற். 60: 1-2, 6-8)*

என்னும் நற்றிணைப் பாடலடிகளில் நாற்று நடும் உழவனும், எருமை மாடுகளை உடைமையாகக் கொண்டு உழுவதும், நாற்று நடும் உழத்தியரும் சுட்டப்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**பயிர்த்தொழில்**

பயிர்த்தொழில் செய்யும் வேளாண் மக்களை உழுதுண்ணும் வேளாண் மக்கள், உழுவித்துண்ணும் வேளாண் மக்கள் என இவ்விருவகை வேளாண் மக்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

*“புன்காய்ச் சுண்ணம்படைத்த மார்பின்*
*இரும்பு வடித்தன்ன மடியாமென்தோல்,*
*கருங்கை வினைஞர் காதல்அம் சிறாஅர்*
*பழச்சோற்று அமலை முனைஇ, வரம்பில்*
*புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்*
*அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து, அயல*
*கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்,*
*நீங்கா யாணர், வாங்குகதிர் கழனி”*
*(பெரும்.அ.எ. 221-228)*

இப்பாடலில் உழவுத்தொழில் செய்வோரின் குழந்தைகள் பழஞ்சோற்றை வெறுக்க, புதிய வைக்கோலால் வேயப்பட்டு வரப்பிடத்தே உள்ள குடிசையின் முற்றத்தில் அவல் இடிக்கும் ஓசைக்குக் கிளிகள் அஞ்சுகின்ற இடையறாத புதுவருவாய் உடைய கழனி என்று வேளாண் தொழில் செய்யும் உழவனின் உடல் இயல்பும், வீட்டு இயல்பும் கூறப்பட்டுள்ளன.

மேலும், உழுதுண்ணும் வேளாண் மக்களை ‘குடிபுறந்தருநர்’ என்று அழைப்பதை,

*“......... ஞாலத்துக்*
*கூலம் பகர்நர் குடிபுறந்தராஅ*
*குடிபுறந்தருநர் பாரம் ஓம்பி” (பதி. 13)*
*“பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி*
*குடி புறந்தருகுவை ஆயின் நின்” (புறம்.பா. 35)*

இப்பாடல்களில் அறியலாம்.

“சமுதாயத்தில் தலைவர்களான கிழார்களின் கீழ் எண்ணற்ற உழவர்கள் இருந்தனர். இவர்கள் ஏறத்தாழ வீட்டு அடிமை முறைக்கும் பக்கத்திலேயே நிற்கின்றனர் எனத் தெரிகிறது.” (மண்ணும் மனித உறவுகளும், ப.48) உழுதுண்ணும் வேளாண் மக்களைக் கடைசியர், வினைஞர், அரிஞர், களமர், எருமை உழவர், எருதெறி களமர், சிறு குடியர் போன்ற உழுதுண்ணும் வேளாண் மக்களைச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. நெல்லரியும் தொழுவர், நெல்அரிஞர் பற்றி,

*“நெல் அரியும் இருந்தொழுவர்” (புறம். பா. 24)*
*“................ நெல் அரி தொழுவர்”*
*(புறம். பா. 209)*
*“வெண்ணெல் அரிஞர் ............ ” (நற். பா. 350)*
*“வாழை மென் தோடு வார்புறுபு ஊக்கும்*
*நெல் விளை கழனி நேர் கண் செறுவின்,*
*அரிவனர் ............." (நற். பா. 400)*

இப்பாடல்களின் வழி அறியலாம்.

நீர் இறைக்கும் தொழுவர் பற்றியும், எருதெறி களமர் பற்றியும், கடைசியர் பற்றியும், சிறுகுடிகள் பற்றியும் கீழ்க்காணும் பாடல்கள் வழி அறியலாம்.

*“நெல்அரி தொழுவர் கூர் வாள்..............”*
*(நற். பா. 95)*
*“கொண்டைக் கூழைத் தண் தழைக் கடைசியர்”*
*(புறம். பா. 61)*
*“................ எருது எறி களமர்*
*நிலம் கண்டன்ன ............. ” (புறம். பா. 125)*
*“சிறுகுடிப் பெருந்தொழுவர்” (மது.அ.எ.122)*

என்ற பாடலடிகளில் காணமுடிகின்றது.

**உழுவித்துண்ணும் வேளாண் மக்கள்**

உழுவித்துண்ணும் வேளாண் மக்கள் மருதநிலத்தின் தலைவர்களாக (கிழார்) இருந்தார்கள். இவர்களின் வாழ்வு செழிப்பாக இருந்ததை இவர்களின் இல்லச் சிறப்பை வைத்து அறியலாம்.

*"ஏணி எய்தா நீள்நெடு மார்பின்,*
*முகடு துமித்து அடுக்கிப் பழம்பல் உணவின்,*
*குமரி மூத்த கூடுலுங் நல்இல்*
*தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த*
*ஊரா நல்தேர் உருட்டிய புதல்வர்*
*தளர்நடை வருத்தம்விட, அலர்முலைச்*
*செவிலிஅம் பெண்டிர்த் தழீஇ, பால்ஆர்ந்து,*
*அமளித் துஞ்சும் அழகுடை நல்அல்"*
*(பெரும்.அ.எ. 245-252)*

இப்பாடலடிகளின் மூலம் உழுவித்துண்ணும் வேளாண் மக்கள் இல்லம் நீண்ட ஏணிக்கு எட்டாத உயரம் மேற்பகுதியைத் திறந்து போடுகின்ற அளவிற்கான நெற்கூடு உடைய நல்ல இல்லம் சிறுதேர் உருட்டி விளையாடிய புதல்வர்கள், வருத்தம் நீங்கச் செவிலித்தாயார் ஊட்டிய பாலை உண்டு படுக்கையிலே உறங்கும் அழகுடைய இல்லம் என்பதை அறியலாம்.

**மருத நில பொருளாதாரம்**

மருத நில இயல்பால் வேளாண் உற்பத்தி முறையில் கிடைத்த உபரியைச் சேமித்து வைக்கத் தொடங்கினர். மருத நிலத்தின் பொருளாதார அடிப்படைக்கும், உணவின் அடிப்படை ஆதாரத்திற்கு நெல் பெற்ற மதிப்பு மென்மேலும் அதிகரித்தன. நெல்லுக்குக் கிடைத்த மதிப்பால் நாட்டு வளமும், வீட்டு வளமும் செழிப்பாக இருந்தன.

தனியொரு மனிதனின் பொருளாதார மதிப்பு என்பது அவன் வீட்டில் சேமிக்கப்பட்ட நெற்கூடுகளின் (தொம்பை) எண்ணிக்கையைப் பொறுத்தது. அந்நெற்கூடுகளைப் பாதுகாக்க காவலாளிகளும் நிர்ணயிக்கப்பட்டதைச் சங்க பாடல்கள் வழி அறியலாம்.

*"செவ்வி சேர்ந்த புள்ளி வெள் அரை*
*விண்டுப் புரையும் புணர் நிலை நெடுங்கூட்டுப்*
*பிண்ட நெல்லின் தாய் மனை ..." (நற். பா. 26)*

இப்பாடல்களின் வழி மருத நிலத்தையுடைய தலைவியின் தாய் வீட்டில் நெற்கூடுகள் மலைபோல குவிந்திருக்கின்றன என்பதன் மூலம் வீட்டின் வளத்தை அறியலாம். 'செவ்வி சேர்ந்த புள்ளி...' என்பதன் வழி நெற்கூடுகளின் எண்ணிக்கையை அறிய புள்ளிகள் வைக்கப்பட்டனவாம். எண்ணிக்கையில் அடங்காத வகையில் நெற்கூடுகள் அதிக அளவில் இருந்ததை அறியலாம். உழவனின் செல்வ செழிப்பை,

*"மலை கண்டன்ன நிலை புணர்நிவப்பின்*
*பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ"*
*(நற். பா. 60)*

மலையைச் செய்து வைத்து போன்ற உயர்ச்சி மிக்க நிலை பொருந்திய பெரிய நெற்கூடுகளோடு எருமை மாடுகளை உடைய உழவன் என்பதிலிருந்து நெற்கூடுகளோடு உழவிற்குத் தகுந்த மாடுகளையும் தன்னகத்தே உழவன் கொண்டுள்ளான் என்பதை அறியமுடிகின்றன. இவற்றைப் பாதுகாக்க காவலர்கள் இருந்ததை,

*"நெடு நா ஒள் மணி கடிமனை இரட்ட"*
*(நற். பா. 40)*

இப்பாடலின் வழி அறியலாம். கடிமனை என்பதிலிருந்து மனையின் காவலுக்கு காவலர்கள் அதிகமாக நின்றதை அறியலாம். மருதநில இல்லத்தில் நெற்கூடு மலை போன்று குவிந்து இருந்ததை,

*"விண்டு அன்ன வெண்ணெற் போர்வின்*
*கை வண் விராஅன், இருப்பை ...." (ஐங். பா. 58)*

இப்பாடலின் வழி அறியலாம்.

**பண்டமாற்று பொருளாதாரம்**

பண்டமாற்று என்பது ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளைக் கொள்வதாகும். பழங்காலத்தில் முதலில் பண்டமாற்று முறை இருந்தத்தைச் சங்க பாடல்கள் வழி அறியலாம். மேலும், மற்ற திணை மக்கள் நெல்லைப் பெற தாம் தம் நிலத்தில் கிடைக்கும் பொருட்களைக் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை பெற்றுச் சென்றனர். இதனைச் சங்கப் பாடல்கள் பல நமக்கு உணர்த்துகின்றன.

குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த வேடன் தான் வேட்டையாடிக் கொண்டு வந்த மான் இறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லையும், முல்லை நிலம் சார்ந்த இடைச்சியரும் உழவனிடத்தில் தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டதை,

*"கான் உறை வாழ்க்கை, கதநாய் வேட்டுவன்*
*மான் தசை கொரிந்த வட்டியும், ஆய்மகள்*
*தயிர் கொடு வந்த தசும்பும், நிறைய,*
*வரின் வாழ்நர் பேர் இல் அரிவையர்*
*குளக் கீழ் விளைந்த களக் கொள்வெண்ணெய்*
*முகந்தனர் கொடுப்ப, உகந்தனர்" (புறம். பா. 33)*

இப்பாடலின் வழி அறியலாம்.

மேலும், பாணர்கள் பிடித்த மீனைப் பாண்மகளிர் மருத நில ஊரில் கொண்டுபோய் விற்று பண்டமாற்றியதை,

*"முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த*
*அகன் பெருவட்டி நிறைய, மனையோள்*
*அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர!"*
*(மு.கூ.நூற்பா.47)*

*"வலைவல் பாண்மகன் வால் எயிற்று மடமகள்*
*வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்*
*யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!"*
*(மு.கூ. நூற்பா. 48)*

இப்பாடல்களின் வழி அறியலாம்.

நெய்தல் நிலத்தைச் சார்ந்த பரதவர்களும் உமண மகளிரும் உப்பை மருத நிலத்தில் விற்று அதற்குப் பதிலாக நெல்லைப் பண்டமாற்றிச் சென்றதை,

*"தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து*
*பிற நாட்டின் உப்பின் கொள்ளை சாற்றி"*
*(நற். பா. 183)*

*"நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்*
*சேரி விலைமாறு கூறலின் ............"*
*(அகம். பா. 140)*

*"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்*
*கொள்ளீரோ வெனச் சேரிதொறும நுவலும்"*
*(அகம். பா. 390)*

*"உப்பை மாறி வெண்ணெல் யாயும் தரீஇய"*
*(குறுந். பா. 269)*

*"உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு"*
*(மு.கூ. நூற்பா. 60)*

*"உமணர் தந்த உப்பு நொடை நெல்லின்"*
*(நற். பா. 254)*

*"மீன் தொடுத்து நெல் குவைஇ,*
*மிசை அம்பியின் மனை மறுக்குந்து"।*
*(புறம். பா. 343)*

இப்பாடல்களின் வழியே அறியலாம்.

**கரும்பாலைகள்**

மருத நிலத்து மக்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டு இருந்தத்தை அந்நிலத்தில் எழுந்த கரும்பாலைகள் மூலம் அறியலாம். மருத நிலத்தின் நீர் வளத்தன்மைக்கேற்ப அதிக இனிப்புச் சுவைக் கொண்ட கரும்பினை உற்பத்தி செய்தார்கள். அதன் விளைவால் ஆலைகள் தோற்றம் பெற்றன. கரும்பின் சாறிலிருந்து, தயாரிக்கப்பட்ட வெல்லத்தின் மூலமும் பொருளாதாரத்தைப் பெருக்கினர். கரும்பைச் சாறு பிழியும் எந்திரம் இருந்ததை,

*"கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும்,*
*தேர்வண் கோமான், தேனூர் ..." (ஐங். பா. 55)*

இப்பாடலின் வழி அறியலாம். கரும்புச்சாறு ஆலைகள் சங்க காலத்தில் அமைந்திருந்ததை,

*"கரும்பின் எந்திரன் சிலைப்பின், அயலாது,*
*இருஞ்சுவல் வாளை பிறழும் ..." (புறம். பா. 322)*

இவ்வரிகள் சுட்டுகின்றன. கரும்பாலைகள் பண்டைக்காலத்தில் இருந்ததை,

*"ஆலைக்கு அலமரும், தீம் கழைக் கரும்பே"*
*(மலை..அ.எ. 119)*

*"மழை கண்டன்ன ஆலைதொறும் ஞெரேரெனக்*
*கழை கண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்"*
*(மலை..அ.எ. 340-341)*

*"வேழப் பழனத்து நூழிலாட்டு*
*கரும்பின் எந்திரம், கட்பின் ஓதை"*
*(மது. 257-258)*

இப்பாடல்களின் வழி அறியலாம்.

**வணிகர் தொழில்**

மருத நில மக்களின் வாழ்க்கை வளத்தைப் பெருக்கி நின்ற தொழில்களுள் வணிகத்தொழிலும் இருந்தன. அந்நிலம் வணிகர்கள் வாழும் பெருநிலமாகக் கருதப்பட்டது. சங்ககாலத்தில் வணிப் பொருளாதாரம் வேளாண் பொருளாதாரத்தைப் பின்னுக்குத் தள்ளி வளர்ந்ததையும், இதனால் வேளாண்மை விளைபொருட்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதையும் சங்கப் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

*"நெல் பல பொலிக ..........." (மு.கூ. நூற்பா. 1)*

என்று நெல் முதன்மைப்படுத்தப்பட்ட நிலை மாறி வாணிக வளர்ச்சியில் வேந்தன் முதன்மைப்படுத்தப்படுகிறான். இதனை,

*"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே*
*மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்"*
*(புறம். பா. 186)*

*"நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய என,*
*வரைய சாந்தமும், திரைமுத்தமும்,*
*இமிழ் குரல் முரசம் மூன்றுடன் ஆளும்*
*தமிழ் கெழு கூடற் தண்கோல் வேந்தே"*
*(புறம். பா. 58)*

இப்பாடலடிகளின் வழி அறியலாம்.

வணிகப் பொருளாதாரத்தில் வேந்தர் காட்டிய முக்கியத் துவத்தைக் கொண்டே அவர்களின் வளர்ச்சிக்கு வேளாண்மையைக் காட்டிலும் வணிகம் அடிப்படையாய் அமைந்ததை,

*“வியல் மேவல் விழுச் செல்வத்து,*
*இரு வகையான், இசை சான்ற*
*சிறுகுடிப் பெருந்தொழுவர்,*
*குடி கெழீஇய நால் நிலவரொடு”*

*(மது.அ.எ.120-123)*

இப்பாடலடிகளின் வழி அறியலாம்.

வேளாண் உற்பத்தியில் விளைவிக்கப்பட்ட பொருள்களும், சிறு தொழில்கள் மூலம் செய்யப்பட்ட பொருள்களும் வணிகர்களின் மூலமாக விற்பனை செய்யப்பட்டதால் வணிகர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டு பல்வேறு வணிகர்கள் தோன்றியதைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்கின்றன. வெல்லம், சர்க்கரை விற்ற வாணிகர் பணித வாணிகர், பொன்னை விற்கும் பொன்வாணிகர், வெற்றிலைப்பாக்கு, பண்டங்கள் விற்கும் சிறுவாணிகர் என வணிகர்கள் கூட்டம் பெருகியது. வணிகர்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டு செல்வச் செழிப்போடு வாழ்ந்ததை அறியமுடிகின்றன.

**சங்ககால காசு இயல்**

“சங்ககால மக்கள் பண்டமாற்று வழங்கிய காலத்திலும் காசு வழங்கப்பட்டது” (சங்க இலக்கியம் சில பார்வைகள், ப. 149) பண்டைக் கால நாணயம் செம்பு, வெள்ளி, பொன் போன்ற உலோகப் பொருட்களால் வழங்கப்பட்டன. மேலும், காசுகள் நெல்லிக்காயின் வடிவம் போல உருண்டு தட்டையாய் இருந்தன. மேலும், பொற்காசுகளை வேந்தர்கள், புலவர்களுக்கு பரிசு அளித்தனர் என்பதைப் பதிற்றுப்பத்து பாடல்களின்வழி அறியலாம்.

**வாணிகம்**

பல்வேறு இடத்திலிருந்து கிடைக்கும் உற்பத்தி விளை பொருட்களை ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல எருது, கழுதை, வண்டி, படகு, மரக்கலங்கள் போன்றவற்றைப் பண்டைய கால மக்கள் பயன்படுத்தினர். இதனை,

*“கழிச்சுறா எறிந்த புண்தாள் அத்திரி*
*நெடுநீர் இருங்கழி...........” (மு.கூ.நூற்பா. 120)*

இப்பாடலடிகள் மூலம் வணிகத்திற்கு உயர்தர கழுதைகளைப் பயன்படுத்தினர் என்பதை அறியலாம். சங்க காலத்தில் நடைபெற்ற வாணிகத்தை

- உள்நாட்டு வாணிகம்
- கடல் வாணிகம்
- கரையோர வாணிகம்
- நடுக்கடல் வாணிகம்
- பிறநாட்டு வாணிகம்

என ஐந்து வகையாகப் பிரித்துக் கூறுலாம்.

சங்க காலத்தில் யவனர்கள் வணிகம் செய்ததையும், அவர்கள் பற்றிய குறிப்புகளும் காணக்கிடைக்கின்றன. யவனர்களிடம் ஏற்பட்ட வாணிகத் தொடர்பால் கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. அவை மத்தீகை, சுருங்கை, கலம், கன்னல் என்பன. இதனை,

*“மத்திகை வளைஇய மறித்துவீங்கு செறிவு உடை,*
*மெய்பை புக்க வெருவரும் தோற்றத்து,*
*வலிபுணர் யாக்கை, வன்கண் யவனர்”*

*(முல்லை.அ.எ. 59-61)*

இப்பாடலடிகளின் வழி அறியலாம்.

**பிற தொழில்களும் பொருளாதாரமும்**

பொருள் ஈட்டும் முதன்மை தொழிலாக வேளாண்மைத் தொழில் கருதப்பட்டது. எனினும் உற்பத்தி பெருக்க முறையால் வணிகத்தொழில் முன்னேற்றம் அடைந்தது. மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் பொருளாதாரத் தன்னிறைவை அடைய இவிரு தொழில்களைத் தவிர பிற தொழில்களும் உதவியது. உழவு என்பது மையப்படுத்தப்பட்ட நிலையில் தான் அரசு உருபெற்றது. அதன் காரணமாக கைத்தொழில்கள் பல்கி பெருகியிருந்தன.

நில வருவாய், வாணிகம், போரில் கைப்பற்றப்பட்ட பொருள்கள் அல்லது பகைவர் பணிந்து செலுத்தும் பொருள்கள் ஆகிய இம்மூன்றும் அரசு வருவாய்க்குரிய முதன்மை ஆதாரங்கள் ஆகும். இவற்றின் மூலம் பெறும் பொருளாதாரத்தைக் கவனிக்க அரசால் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

**தச்சுத் தொழில்**

தச்சுத் தொழிலில் சங்க கால மக்களிடையே முக்கியப் பங்கு வகித்தது. மரம் சார்ந்த வேலைகளைச் செய்பவரை தச்சர் என்று அழைப்பர். இத்தச்சரைத்தான் கம்மாளர் என்று சாதி அடிப்படையில் அழைக்கப்படுவார்கள். “தச்சுத்தொழில் செய்வோரைப் பொதுவாகச் சிற்பம் செய்வோர் என்றும் கூறப்படுகிறது. ‘சிற்பம்’ என்ற சொல்லிற்குக் கல்மரம் ஆகியவற்றில் கலையுணர்வுடன் செதுக்கப்பட்ட உருவம், சிலை” (கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.584) என்பதாகப் பொருள்படுகின்றது. ‘மரவேலை செய்பவர் தச்சர் என்று அழைக்கப்பட்டனர்.

"கல் தச்சர், மரத்தச்சர் என இவ்விரு வகை தச்சர்கட்கும் கம்மாளர் என்ற பெயரும் உண்டு" (பண்டைத் தமிழ் தொழில்கள், ப.61) என்கின்றனர். மரத்தால் தேர்வண்டி (சிறுவர் ஓட்டும் தேர்) செய்பவரைத் தச்சன் என்ற பெயரால் அழைத்தனர்.

*"தச்சன் செய்த சிறுமா வையம்*
*ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையிச்*
*ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல,*
*உற்று இன்புறேஎம் ஆயினும், நற்றேர்ப்*
*பொய்கை ஊரன்............." (குறுந். பா. 61)*

இப்பாடலின் மூலம் சிறுவர்கள் இழுக்கும் சிறிய தேரையும், ஊரின் தலைவன் செல்லும் பெரிய தேரையும் செய்து கொடுப்பவன் தச்சன் என்பதை அறியமுடிகிறது.

**நெசவுத் தொழில்**

மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஆடையை நெசவாளர் நெய்தனர். பண்டைக் காலத்திலேயே நெசவுத்தொழில் இருந்தது என்பதை அறியும்போது நம் முன்னோர்களின் தொழில்நுட்பத்தை அறியமுடிகிறது. நெய்தல் தொழில் செய்த நெசவாளரைக் கம்மியர் என்று அழைக்கும் வழக்கம் இருந்ததை,

*"............ ஒண்பல்*
*குறியவும் நெடியவும் மடி தரூஉ விரிந்து,*
*சிறியரும் பெரியரும் கம்மியர் ..."(மது.அ.எ. 520-522)*

இப்பாடலடிகளின் மூலம் அறியலாம்.

**கொல்லர் தொழில்**

பண்டைக் காலத்தில் இரும்புத்தொழில் செய்பவர்களைக் கொல்லர்கள் என்று அழைப்பர்.

*"இரும்பு பயன் படுக்கும் கருங்கைக் கொல்லன்*
*விசைத்து எறி கூடமொடு பொரூஉம்*
*உலைக் கல் அன்ன ......" (புறம். பா. 170)*

இப்பாடலடிகளின் வழி அறியமுடிகின்றன. இரும்புத் தொழில் செய்யும் கொல்லர்கள் தனியாகப் பட்டரை வைத்திருந்தனர் என்பதை அறியலாம்.

**ஓலைத்தொழில்**

பண்டைக் கால தொழில்களில் முக்கியமான தொழில் ஓலைத் தொழிலாகும். மக்களின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சடங்குகளில் ஓலை முக்கியத்துவம் பெற்றிருந்தன. வணிகத்திற்கு வண்டியில் எடுத்துச் செல்லும் உப்பு கரையாமல் இருக்க ஓலை பாயால் வண்டிக்குக் கூரை போட்டனர் என்பதை,

*"ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து"*
*(மு.கூ.நூற்பா. 30)*

*"மறித் துருஉத் தொகுத்த பறிப் புற........"*
*(மு.கூ.நூற்பா. 94)*

*"முன்றில் கிடந்த பெருங் களியாற்கு*
*அதள் உண்டாயினும், பாய் உண்டாயினும்"*
*(புறம். பா. 317)*

இப்பாடலடிகளின் மூலம் தெரியலாம்.

**தொடுதோல் தொழில்**

காலில் அணியும் செருப்பிற்குத் தொடுதோல், அடி, புதை, அரணம் என்ற பெயர்கள் வழங்கினர். மேலும் வணிகர்களும், மேய்ச்சல் தொழில் செய்யும் இடையர்களும் செருப்பு அணிந்திருமைக்கான குறிப்புகள் உள்ளன. இதன் மூலம் செருப்பு தைக்கும் தொழில் இருந்தமையை அறியலாம். இதனை,

*"அடிபுதை அரணம் எய்தி, படம்புக்கு"*
*(பெரும்.அ.எ.69)*

*".......தொடுதோல் மரீஇய வடுஆழ், நோன்அடி"*
*(பெரும்.அ.எ.169)*

இவ்வடிகள் சுட்டுகின்றன.

**முடிவுரை**

மருதநில முதன்மைத் தொழிலான வேளாண்மைப் பற்றியும், அரசின் வருவாயைப் பெருக்கும் வணிகம் மற்றும் வணிகத் தொழில்கள் மூலம் மனித வாழ்விற்கு அடிப்படைத் தேவையான பொருளாதாரத்தை ஈட்டித் தரும் தொழில்கள் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்பங்க பயன்படுத்தியதின் விளைவாக தனிமனிதனின் பொருளாதார வளர்ச்சி மேன்மையுற்று விளங்குவதை அறியமுடிகிறது. பொருளாதாரம்தான் சமூகத்தைக் கட்டமைத்தது எனின் அதற்குத் தொழில்கள் அடிப்படையாய் அமைந்தது என்பது திண்ணம்.

**துணைநூற் பட்டியல்**

1. ஆலிஸ் அ. (உ.ஆ), பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
2. செயபால் இரா. (உ.ஆ), அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
3. நாகராசன் வி. (உ.ஆ), ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
4. நாகராசன் வி. (உ.ஆ), குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004

5. பாலசுப்பிரமணியன் கு.வெ. (உ.ஆ), நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
6. பாலசுப்பிரமணியன் கு.வெ. (உ.ஆ), புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
7. மோகன் இரா. (உ.ஆ), பத்துப்பாட்டு (பகுதி – 1), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
8. காசிநாதன். நடன, தமிழர் காசு இயல், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003
9. கேசவன் கோ., மண்ணும் மனித உறவுகளும், சென்னை புக் ஹவுஸ், சென்னை, 2001
10. சசிவல்லி வி.சி., பண்டைத் தமிழர் தொழில்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989
11. சிதம்பரனார் சாமி., பத்துப்பாட்டும் பண்டைத் தமிழர் வாழ்வும், அமிழ்தம் பதிப்பகம், சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், 2013
12. பாலுச்சாமி எ., மருதத்தில் மக்கள் வாழ்வியல் உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2011
13. வேங்கடசாமி மயிலை சீனி, பழங்கால தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007